அனுமதிக்கப்படும். ஆனால், பயிற்சிக் கால அளவில் நாட்படி எதுவும் கொடுக்கப்படமாட்டாது. அன்றியும், எந்தப் பள்ளியிலிருந்து அவர்கள் பயிற்சிக்கு அனுப்பப் பட்டனரோ, அந்தந்தப் பள்ளிகளில் பயிற்சிக் கால அளவில் வழக்கமான சம்பளம், படிகளைப் பெறவும் இப் பண்டிதர்கள் அனுமதிக்கப்படுகின்றனர்.

எஸ்.எஸ்.எல்.சி. யாயிராத தகுதி பெற்ற பண்டிதர்களைப் பொறுத்த வரையில் பொது கல்வித் தகுதியைத் தளர்த்தி அவர்கள் எழுத்தர்களாகவோ, அல்லது பள்ளிகளில் நூலகக் காப்பாளர்களாகவோ அல்லது ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளிகளிலும், உயர் தொடக்கப் பள்ளிகளிலும் பயிற்சி பெறாத தொடக்க நிலை ஆசிரியர்களாகவோ வைத்துக் கொள்ளப்படுகின்றனர்.

ஆசிரியர்களாகவோ அல்லது வேறு தன்மைகளிலோ பணியில் வைத்து கொள்ளப்படுகிற எல்லா வகைப் பண்டிதர்களைப் பொறுத்த வரையில், அவர்களுடைய சம்பளமும், சம்பள விகிதமும் பாதுகாக்கப்பட்டுள்ளன. (ஆசிரியர்களா யில்லாத) வேறு தன்மைகளில் ஏற்றுக் கொள்ளப்பட்ட பண்டிதர்கள் ஆசிரியர்களுக்கு உரிய ஓய்வு ஊதிய நலன்களைத் தனி முறையில் தொடர்ந்து பெறத் தகுதியுடையவர்களாவர். ஆகவே கல்வித் தகுதிபெற்ற வடமொழிப் பண்டிதர்கள் அனைவரும் அவரவர் தகுதிக்கேற்ப தகுந்த பகுதிகளில் வைத்துக் கொள்ளப்படுவதற்கு எல்லா முயற்சிகளும் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன என்பதைக் காணலாம்.

கல்வித் தகுதி பெற்றிராத, பகுதி நேரப் பண்டிதர்களை மட்டுமே பணியில் வைத்துக் கொள்ள முடியவில்லை. இருமொழிக் கொள்கை செயலுக்குக் கொண்டுவரப்படாதிருந்தபோதிலும், முழுவதும் தற்காலிக அடிப்படையிலேயேநியமிக்கப்பட்ட கல்வித் தகுதி பெறாத அத்தகைய பண்டிதர்களின் பணி, காலியிடம் இல்லையென்றபோது நீக்கப்பட்டிருக்கும்.

திரு. க. கோமதிசங்கர தீட்சிதர்: சபாநாயகர் அவர்களே, உயர்ந்த தகுதி வாய்ந்த எம்.ஏ.-க்கு சமமான குவாலிபிகேஷன் பெற்றுள்ள 100-க்கும் குறைவாக உள்ள சமஸ்கிருதப் பண்டிதர்களுக்கு ஆரம்பப் பள்ளிகளில் அலுவல்கள் கொடுப்பதைவிட அவர்களுக்கு ஹை ஸ்கூல்களிலே கிராப்ட் பீரியடையாவது அல்லது மாரல் பீரியடையாவது ஒதுக்கி அவரவர்கள் குவாலிபிகேஷனுக்குத் தகுந்த முறையிலே அவர்களை தமிழ் நாடு அரசாங்கம் நன்றாக மதித்து ஆரம்பப் பள்ளிகளிலே அனுமதிப்பதை விட உயர்நிலைப் பள்ளிகளிலே பணிசெய்ய நடவடிக்கை எடுக்க முன் வருமா? ஏனென்றால் தமிழ் மொழியும் வடமொழியும் இரண்டும் நம்முடைய இரண்டு கண்கள். ஆகவே வடமொழிக்கும் போதிய வசதி செய்து கொடுக்க முன்வருவார்களா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: வடமொழியில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குள்ள பற்றுதலை என்னால் உணர முடிகிறது. 153 பேர்களிலே 138 பேர்களுக்கு ஏற்கெனவே பாதிக்கப்படாமல் பாதுகாப்புக் கொடுக்கப்பட்டிருக்கிறது. 15 பேர்களுக்கு வாய்ப்பு எங்கெங்கே இருக்கிறதோ, அங்கே அவர்களுக்கும் கொடுக்க வேண்டுமென்று தான் அரசாங்கம் ஆணை பிறப்பித்து இருக்கிறது.

2. நடைமுறை கேள்விகள்—தொடர்ச்சி.

(ஈ) உறுப்பினர் பெயரைச் சரியாக குறிப்பிடாமை.

***திரு. தி. தீர்த்தகிரி கவுண்டர்:** ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர் சார், என்னுடைய பெயரில் 41-வது பிரிவின் கீழ் கவன ஈர்ப்புக் கொடுக்கப் பட்டது. ஆனால் அதில் என்னுடைய பெயரைப் போடவில்லை, தீர்த்தகிரி என்று தான் போட்டிருக்கிறது. சென்ற தடவையும் நான் பேசியபொழுது தீர்த்தகிரி கவுண்டர் ஆகிய நான் பேசிய பொழுது அது தீர்த்தகிரிபேசியதாக ஆகிவிட்டது. தீர்த்தகிரி அவர்கள், நான் இருவரும் ஒரே ஊர் ஆனால் தொகுதி வேறு. எனவே நான் பேசியதற்கு முரணாக வந்துவிடுகிறது. சென்ற தடவை நான் பேசியதை தீர்த்தகிரி பேசியதாக பத்திரிகையிலே வந்து இருக்கிறது. எனவே இனிமேலாவது தீர்த்தகிரி என்று போடாமல் நான் பேசினால் தீர்த்தகிரி கவுண்டர் என்று போடவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

1969 மார்ச் 5]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இனிமேல் அவ்வாறு ஏற்படாமல் கவனித்துக்கொள்கிறேன்.

5. அறிவிப்புகள்.

(அ) வெட்டுத் தீர்மானங்கள் கொடுப்பதற்கான கடைசித்தேதிகள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து அறிவிப்புகள்.

மானியக் கோரிக்கைகள் மீது வெட்டுத் தீர்மானங்கள் கொடுப்பதற்கு ஏற்கனவே குறிப்பிட்ட கடைசி தேதிகளை மாற்றி, கீழ்க்கண்டபடி கொடுக்கலாம் என்று அறிவிக்கிறேன்.

மானியக் கோரிக்கை எண்கள் 22, 23, 29, 20, 40, 13, 25, 1, 4, 31, 32, 36, 37, 45, 47, 12 — 5—3—1969-ம் தேதி பிற்பகல் 3 மணிக்குள்; ஏனைய மானியக் கோரிக்கைகள்: 7—3—1969-ஆம் தேதி பிற்பகல் 3 மணிக்குள்.

(ஆ) ஆளுநரிடமிருந்து வந்துள்ள செய்தி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஆளுநர் அவர்களுக்கு நன்றியுரை அளிக்கும் தீர்மானம் இப்பேரவையில் 1969-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 25-ம் தேதி நிறைவேற்றப்பட்டதைக் குறித்து அவர்களிடமிருந்து கீழ்க்காணும் செய்தி எனக்கு வரப்பெற்றதைத் தெரிவிக்கிறேன் :—

"நான் சட்டப் பேரவையின் கூட்டத்தை ஆரம்பித்து நிகழ்த்திய உரைக்கென சட்டப்பேரவை அனுப்பியுள்ள நன்றியறிவிப்புத் தீர்மானத்தைப் பெற்றுக்கொண்டதில் மனநிறைவு எய்துகிறேன்."

(இ) பேரவை அலுவல் நிகழ்ச்சி விபரம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1969-ம் ஆண்டு மார்ச்சு மாதம் 4-ம் தேதி மாண்புமிகு உறுப்பினர்களுக்கு அனுப்பப்பட்ட விவரப்படி பேரவையில் மானியக் கோரிக்கைகள் மீதான விவாதமும், வாக்கெடுப்பும் நடைபெறும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஈ) அண்ணாமலை பல்கலைக்கழக ஆட்சிக் குழுவிற்கு தேர்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அண்ணாமலைப் பல்கலைக் கழக ஆட்சிக் குழுவிற்காக (Annamalai Uniuersity Senate) மூவருடைய பெயர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளன. முறைப்படி நியமனம் செய்யப்பட்டுள்ள வேட்பாளர்களின் எண்ணிக்கை நிரப்பப்பட வேண்டிய வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு ஒத்திருப்பதால், அதாவது, மூன்று என்பதால், திரு. எஸ். இராமச்சந்திரன், திரு. ஆ. கோவிந்தராசன், திரு. கோ. பூவராகன் ஆகிய மூன்று வேட்பாளர்களும் அண்ணாமலைப் பல்கலைக் கழக ஆட்சிக் குழுவிற்கு முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்கள் என நான் பேரவைக்கு அறிவிக்கிறேன்.

6. அரசினர் மசோதா.

தமிழ்நாடு 1969-ம் ஆண்டு பயிரிடும் குத்தகைக்காரர்கள் பாதுகாப்பு நியாய வாரம் செலுத்துதல் (திருத்த) மசோதா.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து அரசினர் மசோதா, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் தமிழ்நாடு 1969-ம் ஆண்டு பயிரிடும் குத்தகைக்காரர்கள் பாதுகாப்பு—நியாய வாரம் செலுத்துதல் (திருத்த) மசோதாவை அறிமுகம் செய்ய அனுமதி கோருவார்கள்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1969-ம் ஆண்டு பயிரிடும் குத்தகைக்காரர்கள் பாதுகாப்பு—நியாய வாரம் செலுத்துதல் (திருத்த) மசோதாவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது.